2028.இம்மாநிலங்களை தனியாக பிரிப்பதற்கு முன்பு, அவை எம்மாநிலத்துடன் இணைந்திருந்தது என்பதை அடையாளம் கண்டு கீழே கொடுக்கப் பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையை தேர்ந்தெடு:

| A | B |
|---|---|
| a) ஹரியானா | 1. உத்திரப்பிரதேசம் |
| b) ஜார்கண்ட் | 2. மத்தியப்பிரதேசம் |
| c) உத்தராஞ்சல் | 3. பஞ்சாப் |
| d) சட்டீஸ்கர் | 4. பீகார் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | iv | iii | i | ii |
| B) | iii | ii | i | iv |
| C) | iii | iv | i | ii |
| D) | i | iii | ii | iv |

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

2029.சம்ஜௌதா விரைவு இரயில் போக்குவரத்து இந்தியா பாகிஸ்தான் இடையே ஓடுகிறது. இருநாட்டிலும் அதன் இலக்கை அடையாளம் காண்க.

A) இந்தியாவின் அட்டாரியில் இருந்து பாகிஸ்தானின் லாகூர் வரை

B) இந்தியாவின் குர்தாஸ்பூரில் இருந்து பாகிஸ் தானின் கராச்சி வரை

C) இந்தியாவின் பிரோஸ்பூரில் இருந்து பாகிஸ்தானின் லாகூர் வரை

D) இந்தியாவின் டெல்லியில் இருந்து பாகிஸ்தானின் லாகூர் வரை

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

2030.தொடர்ந்து வருகிற ஒவ்வொரு இரவிலும் சந்திரன் தோன்றுவது

A) 52 நிமிடம் தாமதமாக B) 90 நிமிடம் முன்னதாக

C) ஒரே நேரத்தில் D) 2 மணி நேரம் தாமதமாக

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

2031.தினசரி வெப்ப வியாப்தி அதிகமாகக் காணப்படும் இடம்

A) பூமத்தியரேகைப் பிரதேசம்

B) சவானா புல்வெளி

C) மிதவெப்பமண்டல புல்வெளி

D) வெப்பப் பாலைவனங்கள்

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

2032.2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டின் மக்களடர்த்தி

A) 555 மக்கள்/ச.கி.மீ. B) 480 மக்கள்/ச.கி.மீ.

C) 382 மக்கள்/ச.கி.மீ. D) 325 மக்கள்/ச.கி.மீ.

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

2033.கிரீன்விச் தீர்க்கரேகையில் மதியம் 1 மணியாக உள்ள போது, இந்திய மத்திய தீர்க்கரேகையின் தல நேரம்

A) 4.30 pm B) 5.30 pm

C) 6.30 pm D) 7.30 pm

*(TNPSC -GR.II SERVICES - 2015)*

2034.கீழ்க்காணும் வாக்கியங்களை கவனி.

கூற்று (A) : மண் அரிப்பு என்பது பல்வேறு காரணிகளின் விளைவாகும்.

காரணம் (R) : காடழிதல், அதிக அளவு கால்நடை மேய்ச்சல் மற்றும் தவறான வேளாண் முறைகள்.

A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) சரி, ஆனால் (R) தவறு

D) (A) தவறு, ஆனால் (R) சரி

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

2035.பட்டியல் I-உடன், பட்டியல் II-ஐப் பொருத்தி பட்டியலுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| பட்டியல் - I | பட்டியல் - II |
|---|---|
| a) டபிள்யு.கே. கோப்பன் | 1) அமெரிக்க காலநிலை வல்லுனர் |
| b) ஆல்பிரட் வெக்னர் | 2) உலக காலநிலை வகைப்பாடு |
| c) சர் ஜார்ஜ் ஐரி | 3) சமநிலத் தன்மை கோட்பாடு |
| d) ஜி.டி. திருவார்த்தா | 4) கண்ட நகர்வுக் கொள்கை |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 3 | 1 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

*(TNPSC - ASST. STATISTICAL INVESTIGATOR - 2015)*

2028 ....C 2029 .... A 2030..... A 2031..... D 2032 .... A 2033.... C 2034..... A 2035.... A

**2036.** கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருத்தப் பட்டுள்ளது எது?

| | | |
|---|---|---|
| I) ஹேமடைட் தாது | – | அயனியாக்கம் |
| II) மேக்னடைட் | – | நீர்ம அயனியேற்றம் |
| III) லிமோனைட் | – | இரும்பு கார்பனேற்றம் |
| IV) சிடரைட் | – | கருப்பு தாது |

A) I　　B) II

C) III　　D) IV

*(TNPSC – ASST. STATISTICAL INVESTIGATOR – 2015)*

**2037.** கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தாதவை எவை?

A) பாத்தோலித் – உள்ளமிழ்ந்த தீப்பாறை

B) லாக்கோலித் – வெளியமைந்த தீப்பாறை

C) கரிமப்பாறை – படிவுப் பாறை

D) சலவைக்கல் – உருமாறியப் பாறை

*(TNPSC – ASST. STATISTICAL INVESTIGATOR – 2015)*

**2038.** கீழ்க்காணும் வாக்கியங்களை கவனி.

கூற்று (A) : சூரியக் குடும்பத்தில் சூரியன் வெப்பம் மற்றும் வெளிச்சத்திற்கு மூல ஆதாரமாக விளங்குகிறது.

காரணம் (R) : பூமியில் உள்ள எல்லா உயிர்களும் சூரியனை சார்ந்தே வாழ்கின்றன.

A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) தவறு, ஆனால் (R) சரி

D) (A) சரி, ஆனால் (R) தவறு

*(TNPSC – ASST. STATISTICAL INVESTIGATOR – 2015)*

**2039.** வடக்கே கிரீன்லாந்திற்கும், தெற்கே நியூ பவுண்ட் லேண்டிற்கும் இடையே உள்ள கடல் கொப்பறை

A) லாப்ரடார் கொப்பறை

B) கேப் கொப்பறை

C) கினியா கொப்பறை

D) அகுல்ஹாஸ் கொப்பறை

*(TNPSC – ASST. STATISTICAL INVESTIGATOR – 2015)*

**2040.** கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்திய நீர்வீழ்ச்சிகளை உயரங்களின் அடிப்படையில் இறங்கு வரிசைப் படுத்துக.

A) சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி, ஜோக் நீர்வீழ்ச்சி, கிள்ளியூர் நீர்வீழ்ச்சி, ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி

B) ஜோக் நீர்வீழ்ச்சி, சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி, கிள்ளியூர் நீர்வீழ்ச்சி, ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி

C) சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி, ஜோக் நீர்வீழ்ச்சி, ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி, கிள்ளியூர் நீர்வீழ்ச்சி

D) ஜோக் நீர்வீழ்ச்சி, சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி, ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி, கிள்ளியூர் நீர்வீழ்ச்சி

*(TNPSC – MATERNAL & CHILD HEALTH OFFICER – 2015)*

**2041.** கீழ்க்காணப்படுபவைகளுள் பாதுகாக்கப்பட்ட உயிர் கோளம் இல்லா இடம்

A) மானாஸ் (அஸாம்)

B) நீலகிரி (தமிழ்நாடு)

C) காசிரங்கா (அஸாம்)

D) சுந்தர்பான்ஸ் (மேற்கு வங்காளம்)

*(TNPSC – MATERNAL & CHILD HEALTH OFFICER – 2015)*

**2042.** கொடுக்கப்பட்டுள்ள இந்திய நதிகளை அவைகளின் துணை நதிகளோடு பொருத்துக :

| நதிகள் | துணை நதிகள் |
|---|---|
| a) கங்கை | 1. அமராவதி |
| b) கிருஷ்ணா | 2. தாவா |
| c) காவிரி | 3. காளி |
| d) நர்மதா | 4. பீமா |

குறியீடுகள் :

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 2 | 3 | 4 | 1 |

*(TNPSC – MATERNAL & CHILD HEALTH OFFICER – 2015)*

**2043.** இந்தியாவின் 'இறால் தலைநகரம்' என்றழைக்கப் படும் மாவட்டம்

A) நாகப்பட்டினம்　　B) சென்னை

C) கட்டாக்　　D) நெல்லூர்

*(TNPSC – MATERNAL & CHILD HEALTH OFFICER –2015)*

2036 ....A 2037 .... B 2038..... A 2039..... A 2040 .... B 2041.... C 2042 ..... A 2043.... D

**2044.** கீழ்க்காணும் கூற்றுகளில் ஒன்று பசுமைப் புரட்சியின் இயல்புகளாக இல்லை?

A) அதிக விளைச்சல் தரும் வித்துக்கள்

B) இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவது

C) விவசாய நடவடிக்கைகளில் இயந்திரங்களை பயன்படுத்துவது

D) விவசாயத்தில் அதிக எண்ணிக்கையில் உழைப் பாளர்களைப் பயன்படுத்துவது

*(TNPSC – MATERNAL & CHILD HEALTH OFFICER – 2015)*

**2045.** பட்டியல் I-ஐ பட்டியல் II-உடன் பொருத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| பட்டியல் I (கால நிலை) | பட்டியல் II (காரணம்) |
|---|---|
| a) கொல்கத்தாவை விட சென்னை வெப்பமாக உள்ளது. | 1. கடலில் இருந்து தூரம் |
| b) இமயமலையில் பனிப் பொழிவு | 2. உயரம் |
| c) மேற்கு வங்கத்திலிருந்து பஞ்சாப் நோக்கி செல்ல மழை குறைகிறது | 3. மேற்கத்திய காற்று |
| d) குளிர்கால மழைப் பொழிவு | 4. அட்சரேகை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 4 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 4 | 2 | 1 | 3 |

*(TNPSC – GROUP I SERVICES – 2015)*

**2046.** கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் கோள் காற்று அல்லாதவை எது?

A) மேலைக் காற்று B) வியாபாரக் காற்று

C) பருவக் காற்று D) துருவ கீழைக்காற்று

*(TNPSC – GROUP I SERVICES – 2015)*

**2047.** இந்தியாவில் அயன மண்டல பசுமை மாறாக் காடுகளை கொண்டிராத பகுதி

A) மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதி

B) மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குப் பகுதி

C) அந்தமான் நிக்கோபார் தீவுகள்

D) உப அயன கிழக்கு இமயமலை

*(TNPSC – GROUP I SERVICES – 2015)*

**2048.** பின்வரும் கூற்றை கவனித்து கொடுக்கப் பட்டுள்ளவைகளில் சரியான விடையை தேர்ந் தெடுக்கவும்

I. "ஷாம்பென்ஸ்" நிக்கோபார் தீவில் வசிக்கும் ஓர் பழங்குடியினர்.

II. 2011 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இவர்களின் மக்கள் தொகை 229.

A) முதல் கூற்று மட்டும் சரி

B) இரண்டாவது கூற்று மட்டும் சரி

C) இரண்டும் சரியானது

D) இரண்டும் தவறானது

*(TNPSC – GROUP I SERVICES – 2015)*

**2049.** சரியாக பொருந்தியவற்றை தேர்ந்தெடுக்க :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (P) பிளவு | 1. ஸ்ராம்போலி |
| (Q) மடிப்பு | 2. சான் ஆண்டரஸ் |
| (R) புவிஅதிர்வு | 3. இமயமலைத்தொடர் |
| (S) எரிமலை | 4. அதிர்வு மையம் |
| | 5. வானிலைச் சிதைவு |
| | 6. பொறை நீக்கம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | P–1 | Q–2 | R–5 | S–6 |
| B) | P–5 | Q–6 | R–1 | S–2 |
| C) | P–2 | Q–3 | R–4 | S–1 |
| D) | P–4 | Q–3 | R–1 | S–6 |

*(TNPSC – GROUP I SERVICES – 2015)*

**2050.** அயனமண்டல கிழக்கு பசிபிக் சமுத்திர மேற் பரப்பில் ஏற்படும் வெப்ப ஏற்றத் தாழ்வுகளானது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

A) வெப்ப தலைகீழ் மாற்றம்

B) வெப்பச் சலனம்

C) தெர்மோகிளைன்

D) எல் நினோ மற்றும் லா நினா

*(TNPSC – GROUP I SERVICES – 2015)*

**2051.** சூரியக் கதிர்வீச்சின் ஒரு பகுதி பிரதிபளிப்பின் மூலம் விண்வெளிக்கு திருப்பி அனுப்பப்படுவது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

A) வளிமண்டல சன்னல்கள் B) அல்பெடோ

C) ராலே ஒளிச் சிதறல் D) ஒளிச் சிதறல் விதி

*(TNPSC – GROUP I SERVICES – 2015)*

2044 ... D 2045 .... D 2046..... C 2047..... A 2048 .... C 2049.... C 2050.... D 2051.... B